126

சர்வதேசத் தீவிரவாதம் பற்றிய திகிலூட்டும் தொடர்

# மாயவலை



பா.ராகவன்

புரட்சி, யுத்தம் என்று ஆரம்பித்துவிட்ட பிறகு, அமெரிக்காவுக்கு சவால் விடாமல் என்ன பெரிய புடலங்காய்? உண்மையில் ஜப்பான் முதலில், அமெரிக்கா அடுத்தது என்பதுதான் அசஹாராவின் செயல்திட்டம். ஆனால், நேரடியாக ஜப்பானிய இலக்குகளை முதலில் தாக்குவதன் மூலம் அரசாங்கம் ஓம் இயக்கத்தின் வாலை ஒட்ட நறுக்கி விட்டால், கனவு மெய்ப்படாமல் போய்விடுமோ என்று கூட்டத்தில் சிலபேர் சந்தேகப்பட்டார்கள். கூட்டம் என்றால் - ஷோகோவின் சிஷ்யகோடிகள்.

ஏற்கெனவே இயக்கத்தின்மீது அரசாங்கத்துக்கு ஒரு கண் இருக்கிறது. என்னவோ ஒரு மரியாதை அல்லது அச்சம் தடுப்பதன் காரணத்தால்தான் இத்தனை காலம் பேசாமல் இருக்கிறார்கள். இப்போது தாக்குதல் என்று தொடங்கி இசகுபிசகாக எங்காவது மாட்டிக் கொண்டு விட்டால் பிரச்னை அல்லவா?

அதனால் சிம்பிளாக, ஜப்பானிலேயே உள்ள சில அமெரிக்க இலக்குகளை முதலில் தாக்கலாம் என்று முடிவு செய்தார்கள்.

இதற்கு வாகாக, 'ஜப்பான் மீது அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ. விஷவாயுத் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது' என்றொரு புரளியை ஓம் இயக்கத்தவர்களே கிளப்பி விட்டார்கள்.

'அன்றைக்கு அணுகுண்டு போட்டவர்கள் இன்றைக்கு விஷவாயு பரப்பி நம்மைக் கூண்டோடு கைலாசம் அனுப்ப முடிவு செய்துவிட்டார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியாது;. அழிவை உத்தேசிக்கிறவர்கள், அழிவுக் கடவுளின் பிரதிநிதியான நான் இங்கே இருக்கிறேன் என்பதை மறந்துவிட்டார்கள்! நான் இருக்கும்வரை அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது!' என்று ஷோகோ பப்ளிக்காக ஒரு பிரசங்கம் செய்தார்.

'இதென்னடா வம்பாப் போச்சே! நமது உளவுத்துறை அதிகாரிகள் சி.ஐ.ஏ.வின் விஷ வாயு ப்ராஜக்ட் குறித்து ஒன்றும் சொல்லவில்லையே... இவர் என்னடாவென்றால், விஷவாயு சப்ளை செய்த ஏஜெண்ட் மாதிரி என்ன வாயு, எத்தனை டன் என்றெல்லாம் கணக்குச் சொல்கிறாரே...' என்று ஜப்பானிய அரசு சிண்டைப் பிய்த்துக் கொண்டது.

நாட்டில் என்ன நடக்கிறது, என்ன நடக்கப் போகிறது என்று ஒரு மாதிரி குத்து மதிப்பாகப் புரிந்துகொண்டு, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஆரம்பிக்க உத்தேசித்திருந்த சமயம் அது. ஷோகோ அசஹாரா மிகுந்த குயுக்தியுடன் ஒரு காரியம் செய்தார்.

தமது 'ராணுவத்திலிருந்து' மிகச் சிறந்த கமாண்டர்களையும் சிப்பாய்களையும் மட்டும் தனியே

பொறுக்கியெடுத்து, ஒரு நாள் ராவோடு ராவாகத் தனி ஹெலிகாப்டர்கள் இரண்டில் ரஷ்யாவுக்கு அனுப்பிவிட்டார். பாதுகாப்புக்குப் பாதுகாப்பாச்சு; அங்கே போய் பயிற்சிக்குப் பயிற்சியுமாச்சு.

ரஷ்யா அவருடைய இரண்டாவது ஆத்தாவூடு அல்லவா? ஏற்கெனவே நாம் சந்தித்துவிட்ட ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் கிரசேவ், 'உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள், என் உயிரைக் கொடுத்தாவது செய்கிறேன்' என்று முன்னதாக வாக்குறுதி அளித்திருந்தார். ஐயோ பாவம், அவருக்கு அமைச்சர் பதவி கொடுத்து கௌரவமான ஒரு வாழ்க்கையைக் கொடுத்து உட்கார வைத்திருந்த அதிபர் போரிஸ் யெல்ஸ்தினுக்குக்கூட அப்படியொரு வாக்களித்திருப்பாரோ என்னவோ?

ஷோகோவின் படையினர் ஓரிரவில் ரஷ்யாவுக்குப் போய்ச் சேர்ந்து மாஸ்கோவின் புறநகர்ப் பகுதி ஒன்றில் இறங்கி, தக்க பாதுகாப்புடன் ராணுவ முகாம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கதை எப்படிப் போகிறது பார்த்தீர்களா?

ரஷ்ய ராணுவத்தில் ஷோகோவின் படையினருக்குப் பயிற்சி மற்றும் பாதுகாப்பு!

ஜப்பானிய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்தால், தனது முக்கியப் படை தப்பித்திருக்க வேண்டும் என்பதுதான் ஷோகோ அவர்களை ரஷ்யாவுக்கு அனுப்பியதன் அடிப்படைக் காரணம். ஆனால், அதனை ரஷ்ய நண்பர்களிடம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. எனவே, பயிற்சிக்கு அனுப்புவதாகச் சொல்லி அனுப்பி வைத்திருந்தார்.

ரஷ்யாவில் டாமன் (Taman), கண்டேமிராவ் (Kantemirov) என்கிற இரண்டு ராணுவ முகாம்களுக்கு அவர்களைப் பிரித்து அனுப்பி, ஒரு வார காலம் தங்கி பயிற்சி மேற்கொள்ள, அமைச்சர் பெருந்தகை தக்க ஏற்பாடுகள் செய்தார். இந்தப் பயிற்சியில் முதன்மையான விஷயம், அதி நவீன ஆயுதங்களை எப்படிக் கையாள்வது என்பது குறித்து நடத்தப்பட்ட பாடங்கள்.

தொலைதூரம் சென்று தாக்கக்கூடிய ராக்கெட்டுகளை ஏவுவது பற்றியும் விமான எதிர்ப்பு பீரங்கிகளை இயக்குவது குறித்தும் முக்கியமாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கூடவே, எதிரி ரேடியோ அலைவரிசைகளை இடைமறித்து, ஒட்டுக் கேட்கவும் பயிற்சிகள் தரப்பட்டிருக்கின்றன. (பின்னால் விசாரணையின்போது தெரியவந்தவை இவை.)

இவற்றையெல்லாம் விடவும் விவகாரமான ஒரு காரியம் அரங்கேறியது. முற்றிலும் மூடி மறைக்கப்படப் பார்த்த இந்த விஷயம், வெளியே வந்தது மிகப்பெரிய ஆச்சர்யம். மிகச் சமீபத்தில் மித்ரோகின் என்கிற முன்னாள் உளவுத்துறை ஆபீஸர் ஒருவர், ரஷ்ய உளவுத்துறையின் ரகசியங்கள் குறித்து இரண்டு குண்டு வால்யூம் புத்தகங்களை வெளியிட்டு ஊரைக் கலக்கினாரே, நினைவிருக்கிறதா? மித்ரோகின் ஆர்க்கைவ் என்கிற பெயரில் வெளிவந்த நூல்கள் அவை. தலைக்கு வைத்துக்கொண்டு படுத்தால் நன்றாகத் தூக்கம் வரும். படித்துப் பார்த்தால் தூக்கம் கெடும்.

அந்த உளவு ரகசிய நூலில் இந்த விவகாரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது!

என்ன விஷயமென்றால், ஒரு சுப முகூர்த்த நாள் பார்த்து, நட்ட நடுராத்திரி வேளையில் ரஷ்யாவின் பிராசிக்கியூட்டர் ஜெனரல் அலுவலகத்தில் ஓர் ஆசாமி கதவைத் திறந்து உள்ளே புகுந்துவிட்டான். கதவைத் திறந்தால் காற்று மட்டுமா வரும்? கள்ளனும் வருவான். அதுவும் கடவுள் அனுப்பி வைத்த கள்ளன். நாம் ஒப்புக்கொள்ளாவிட்டால் என்ன? அவனுக்கு ஷோகோ அசஹாராதான் கடவுள். அந்தப் பாழாய்ப்போன பாதுகாப்புத் துறை அமைச்சர் கிரசேவ்தான் கடவுளின் ஏஜெண்ட்.

பிராசிக்கியூட்டர் ஜெனரல் அலுவலகத்தில் அவனுக்கு என்ன வேலை?

இருந்தது. அங்கேதான் ரஷ்யாவின் உயிரியல் மற்றும் ரசாயன ஆயுதங்கள் பற்றிய முக்கிய ஆவணங்கள் அனைத்தும் இருந்தன. என்னென்ன ஆயுதங்கள், ஒவ்வொன்றுக்கும் வீரியம் என்ன, கலவை சமன்பாடுகள் என்னென்ன, எத்தனை பேரைக் கொல்ல என்ன மாதிரி ஆயுதம் வேண்டும், அதற்கான மூலப்பொருள்கள், அவை எங்கே கிடைக்கும், அல்லது எப்படித் தயாரிக்கலாம் என்பது போன்ற அதி முக்கிய விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் அவை.

'மகனே, எனக்கு அந்த ஃபைலின் காப்பி ஒன்று வேண்டும். ஜெராக்ஸ் எடுத்து அனுப்பி வைத்துவிடு' என்று ஷோகோ பகவான் கிரசேவிடம் கேட்டார்.

'ஓ, அதற்கென்ன, செய்துவிட்டால் போகிறது' என்று, பயிற்சிக்கு வந்த பாதகர்களில் ஒருவனைக் கூப்பிட்டு, பிராசிக்கியூட்டர் ஜெனரல் ஆபீஸின் கதவுகளை அந்த நட்ட நடு ராத்திரி வேளையில் திறந்து விட்டு உள்ளே அனுப்பிவிட்டார். இந்தச் செயலுக்கு அவருக்கு உதவிகரமாக இருந்தவர், போரிஸ் யெல்ஸ்தினின் பாதுகாப்பு கவுன்சிலில் உறுப்பினராக இருந்த ஒலேக் லெபோவ் (Oleg Lebov) என்பவர்.

இந்தச் சம்பவம் நமக்கு இரண்டு விஷயங்களைப் புரியவைக்கும். முதலாவது, ரஷ்யாவில் ஷோகோவுக்கு இருந்த செல்வாக்கு எப்படிப்பட்டது என்பது. இரண்டாவது, கம்யூனிசம் கடைத்தேற்றப்பட்ட பிறகு ரஷ்யா எந்தமாதிரி ஆகிப்போனது என்பது.

அந்த ரகசிய ஆவணம் கைக்குக் கிடைத்ததும், ஷோகோ தமது பணிகளை மேலும் துரிதப்படுத்திவிட்டார்.

ஜப்பானில் அவரது ஆய்வுக்கூடங்களில் பணியாற்றிக்கொண்டிருந்த விஞ்ஞானிகளுக்கு அந்த ரஷ்ய ஃபார்முலாக்கள் அளிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் கொத்துக்கொலை ஆயுதங்களைத் (Weapons of Mass Destruction என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்.) தயாரிக்க உத்தரவிடப்பட்டது.

இந்த இடத்தில் ஓர் இடைச் செருகல் அவசியம். ஓம் ஷின்ரிக்கியோ இயக்கம் குறித்து நாம் பேசத் தொடங்கிய முதல் நாளிலிருந்தே இந்த ரசாயன உயிரியல் ஆயுதங்கள் குறித்து அடிக்கடி கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி என்றால் என்ன? ரசாயன ஆயுதம் என்றால் ஆசிட் வீசுவதா? உயிரியல் ஆயுதம் என்றால் யூரியாவைக் கொண்டு பாம் தயாரிப்பதா?

ம்ஹூம். அது ஒரு பெரிய கடல் அல்லது சாக்கடை. கொத்துக்கொத்தாக மக்களை எப்படி அழிக்கலாம் என்று கலைஞர்கள் உட்கார்ந்து தாடியைத் தடவியபடி யோசித்து யோசித்துத் தயாரித்தவை. எல்லாம் இரண்டாம் உலகப்போர் காலத்துக்குச் சற்று முந்தைய சரக்கு. 1937-லிருந்து தயாரானவை.

உயிரியல் ஆயுதங்களைப் பொறுத்தவரை, முதன் முதலில் அதன் சாத்தியக் கூறுகள் குறித்து யோசித்ததும், தயாரித்துப் பார்த்ததும், பரீட்சித்துப் பார்த்ததும் ஜப்பான்தான். அது கொல்லும் என்று தெரிந்தது. ஆனால், எத்தனை தீவிரமாகக் கொல்லும் என்று பரீட்சித்துப் பார்க்க அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை.

ரசாயன ஆயுதங்களை அப்போது சோவியத் ரஷ்யா தயாரித்துக் கொண்டிருந்தது. எல்லோருக்குமே அணு ஆயுதத் தயாரிப்பு என்கிற கனவு இருந்தது உண்மை. ஆனால், அதன் சாத்தியங்கள் அத்தனை எளிதில் அணுகக்கூடியதாக அப்போது இல்லாதபடியால் ரசாயன,

உயிரியல் ஆயுதங்களைத் தயாரித்து வைத்துக் கொள்வதன் மூலம் அணு ஆயுதங்களுக்கு மாற்றாகப் பயன்படுத்தலாம் என்று நினைத்தார்கள்.

வெளியே தெரிந்தது கொஞ்சம். தெரியாமல் பல்வேறு தேசங்கள் இந்தத் திருப்பணியில் அதே காலகட்டத்தில் இறங்கியிருந்த விஷயம், இரண்டாம் உலக யுத்தம் உச்சகட்டத்துக்குப் போனபோதுதான் தெரியவந்தன. பின்னால் அதி சமத்து அமெரிக்கா முதல் அன்னைத் தாயக பாரதம் வரை பல தேசங்கள் இத்தகைய ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் சில கட்டுப்பாடுகளுக்கு உடன்பட்டு கையெழுத்தெல்லாம் போட்டுக் கொடுத்து நல்ல பிள்ளை இமேஜை வளர்த்துக் கொண்டன.

45-ல் ஜப்பானில் முதல் அமெரிக்க அணுகுண்டு விழுந்த பிறகு இந்த ரசாயன, உயிரியல் ஆயுதங்களுக்கான மவுசு குறையத் தொடங்கிவிட்டது. இன்றைய இரான், வடகொரிய முயற்சிகள் வரைக்கும் உலக நாடுகள் அனைத்தும் ராப்பகலாகக் கண் விழித்து, ஒரே ஒரு அணுகுண்டாவது செய்துவிடமாட்டோமா என்று உழைத்துக்கொண்டிருக்கிற நிலையில், இத்தகைய ஆயுதங்கள் போராளி இயக்கங்களுக்கும், தீவிரவாத இயக்கங்களுக்கும், வளராத நாடுகளின் அரசுகளுக்கும் பெரும் மானசீக பலத்தை அளித்துக் கொண்டிருக்கின்றன.

அதற்காக, ஏழைகளின் அணுகுண்டு என்றெல்லாம் வருணித்துவிட முடியாது. இதுவும் விவகாரமானதுதான். கடும் செலவு பிடிக்கக்கூடியதுதான். ஆபத்தானதும்கூட. ஆனால், அணு ஆயுதங்களோடு ஒப்பிடுகையில் தயாரிப்பது சுலபம். கள்ள மார்க்கெட் ஆசாமிகளே கதவைச் சாத்திவிட்டு உள்ளே சாராயம் காய்ச்சுவது மாதிரி தயாரித்துக் கொடுத்து விடுவார்கள். ஆப்கனில் தாலிபன்கள் இருந்தபோது, இத்தகைய ரசாயன ஆயுதங்கள் கணிசமாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இராக்கில் தானைத் தலைவர் சதாம் செய்திருக்கிறார். இரான், இராக் யுத்த காலத்தில் இரான் இந்த ரக ஆயுதங்களைப் பயன்படுத்தியிருக்கிறது. இன்றைக்கும் பல ஆப்பிரிக்க தேசங்களில் சர்வசாதாரணமாக உயிரியல் ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அப்படி என்ன இருக்கிறது இதில்?

இது மிக முக்கியமான விஷயம். எல்லாமே உயிரைக் குடிக்கக் கூடியவையா என்றால் இல்லை. சிலவகை ஆயுதங்கள் கொல்லும். சில உடனே கொல்லும். சில, கொஞ்சம் பொறுத்துக் கொல்லும்.

வேறு சிலவகை ஆயுதங்கள் இருக்கின்றன. கண் பார்வையை அறவே எடுத்துவிடும். இன்னும் சில உடம்பெல்லாம் அழுகி ஒழுகச் செய்துவிடும். சில ஆயுதங்கள் நரம்பு மண்டலத்தைத் தாக்கி, அப்படியே சிலை மாதிரி வாழ்நாள் முழுதும் உட்காரச் செய்துவிடும். இன்னும் சில, எலும்பை உருக்கி, உங்களை ஓர் ஈர்க்குச்சி மாதிரி ஆக்கிவிடும்.

கொத்தாக ஒரு தெருவை அல்லது ஊரை அல்லது நகரை அல்லது மாநிலத்து மக்களை காலி பண்ணவேண்டுமென்றால் இதுதான் வழி:

ரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களை எடுத்துக்கொள்ள வேண்டியது. (பெரும்பாலும் இவை திரவ அல்லது வாயு நிலையிலேயே இருக்கும். அதற்கேற்ற துப்பாக்கி அல்லது குழலைக்கொண்டு காற்றில் செலுத்த வேண்டியதுதான்.) ஒரு ஹெலிகாப்டரைப் பிடித்துப் பறந்தவண்ணம் ஊரெல்லாம் பீய்ச்சி அடித்துவிட்டால் போதுமானது. கூட்டத்தோடு கைலாயம் உறுதி.

இந்தளவில் அறிமுகத்தை நிறுத்திக்கொண்டு, ஓம் ஷின்ரிக்கியோ எம்மாதிரியான ரசாயன உயிரியல் ஆயுதங்களைத் தயாரித்தது என்று பார்க்கலாம்.